R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
January 2021



கர்த்தருடைய ஊழியர்கள்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday 6.00 P.M on Tamilan TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV
YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

love God
love people
be a servant



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

மரம் 21 ஜனவரி 2021 கனி 2

Happy New Year

MONTHLY THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 14


தலைப்பு : சமாதானபலி – Sacrifice of thanks giving

வேத வாசிப்பு : யாத்திராகமம் 20:24-26

1. மண்ணினாலே பலிபீடத்தை - யாத்.20:24
2. தாவீது பெட்டிக்காக - 2சாமு.6:17




நான் அதிகமாக அறியவில்லை
ஆனால் 3 காரியங்களை அறிவேன்:
தேவன் ஒருவர் உண்டு
அவருடைய வார்த்தை உண்மையுள்ளது,
அவரோடு நெருக்கமாயிரு
அவர் உன்னை முழுவதும் பார்த்துக்கொள்வார் - ஆமென்



I don`t know much
but 3 things I do,
There is a God
His word is true,
Stay close to Him
He`ll see you through - Amen

**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் **YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509







**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 245

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து எந்த கோவிலிலே கொண்டுபோய் வைத்தார்கள்?
2. பவுல் யாருக்கு "என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்" என எழுதினார்?
3. யார் யாருக்காக "உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது என்று பாடினான்?
4. வேலைக்காரர் நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் என்னசெய்யத்தக்கதாக புத்திசொல்லு என பவுல் யாருக்கு எழுதுகிறார்?
5. நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள் என்று சொன்ன ராஜா யார்?
6. பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன் இந்தக் கடைசி நாட்களில் எவர் மூலமாய்திருவுளம்பற்றினார்?
7. எந்த தீர்க்கதரிசி கூப்பிடுகையில் கர்த்தர் ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பாகைக்குப் பாகை முன்போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார்?
8. சந்தேகப்படுகிற மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக என எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. தாவீது இருபது வயதுமுதல் அதற்குக் கீழ்ப்பட்டவர்களின் இலக்கத்தை தொகையேற்றினானா?
10. தேவன் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் என எழுதும் அப்போஸ்தலன் யார்?

## வேதாகம ஆய்வு... 30

**உரியா - Uriah**



1. யேகோவாவின் ஒளி என்று அர்த்தம்
2. தாவீதின் 37 பராக்கிரமசாலிகளில் ஒருவன் – 2சாமு.23:39
3. மெய்க்காவலரான 30 பேரில் ஒருவன் – 1நாளா.11:41
4. இவன் மனைவி பத்சேபாள் – 2சாமு.11:3
5. இவனுக்குப் பின்பு இவன் மனைவி தாவீதுக்கு சாலமோனைப் பெற்றாள் – மத்.1:6

சிறுவர் பகுதி

## ஞாயிறுபள்ளி - Sunday School




இராணுவ மருத்தவமனை ஒன்றில் ஜேம்ஸ் என்ற இராணுவ வீரன் கொடிய காயங்களுடன் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்து ஜெபிப்பதற்காக அவனுடைய சபை போதகர் மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். ஜேம்ஸ் மிகவும் மோசமான நிலையிலிருக்கிறான் என்பதை அறிந்தார் அந்த ஊழியக்காரர். அப்பொழுது ஜேம்ஸ் இலேசாக கண்களைத் திறந்து, போதகரைப் நோக்கி எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும் என்று சொல்லி தன்னுடைய பாக்கெட்டிலிருந்து முகவரிகள் அடங்கிய ஒரு சிறிய நோட்டை எடுத்து அதில் தன்னுடைய ஞாயிறு பள்ளி ஆசிரியையின் முகவரியைச் சுட்டிக்காட்டி ஐயா என்னுடைய சார்பில் இந்த ஞாயிறுபள்ளி ஆசிரியைக்கு ஒரு கடிதம் எழுதவேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொண்டான்.

அவன் சொல்ல அவர் எழுதினார். “அன்புள்ள ஞாயிறுபள்ளி ஆசிரியருக்கு, தேவனுடைய வசனத்தில் சொல்லப்பட்டபடியே எனக்குத் தெளிவாக போதித்தீர்கள். அதன் காரணமாக நான் உண்மையான கிறிஸ்தவனாக மாறினேன். இப்பொழுதும் என் இரட்சகராகிய இயேசுவை சந்திக்க நான் ஆயத்தமானேன். என்னை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவண்டை வழிநடத்தியதற்காக நான் மிகுந்த நன்றியுள்ளவனாயிருக்கிறேன்” என்று எழுதச்சொன்னான். அவனுடைய சபைபோதகரும் அப்படியே எழுதி தாமதமின்றி அனுப்பிவைத்தார். அக்கடிதத்திற்கு உடனடியான பதிலும் ஆசிரியையிடமிருந்து வந்தது.

அதில் “அன்புள்ள ஜேம்ஸ்க்கு நான் கடந்த மாதத்தில்தான் ஞாயிறுபள்ளி ஊழியத்தை விட்டு விட்டேன். ஆனால் உன்னுடைய கடிதம் என்னுடைய சோர்வை மாற்றினது. நான் உற்சாகப்படுத்தப்பட்டு தேவனிடத்தில் முறையிட்டு மீண்டும் இந்த ஞாயிறுபள்ளி ஊழியத்தைச் செய்ய தீர்மானித்துவிட்டேன். என்னை உற்சாகப்படுத்திய உன்னுடைய அன்பான கடிதத்திற்கு நன்றி சொல்கிறேன். கர்த்தர் உன்னை வழிநடத்துவாராக என்று எழுதியிருந்தார்கள். கடிதத்தை வாசித்த சபைபோதகர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடின, அந்த கடிதத்தை வாசிக்க ஜேம்ஸ் இல்லை. அவன் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்துவிட்டான்.

ஞாயிறுபள்ளி ஊழியத்தின் மூலமாக தேவன் பெரிய காரியங்களைச் செய்கிறார். ஞாயிறுபள்ளி ஆசிரியர்களைக் கொண்டு பிள்ளைகளை மெய்யான வழியில் நடத்துகிறார். பிள்ளைகளைக் கொண்டு உற்சாகமிழந்த ஆசிரியர்களை உற்சாகப்படுத்துகிறார். ஆ... தேவனுடைய செய்கைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்!

**“ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது” - நீதிமொழிகள்24:10**

**நடப்புச்செய்திகள்**

- அரசு ஊழியர்கள் ஜீன்ஸ், டி-ஷர்ட் அணியக்கூடாது என மாஹராட்டிர அரசு உத்தரவு.
- பேஸ்புக் ஆதிக்கம் அதிகரிப்பு எதிர்த்து அமெரிக்காவில் வழக்கு.
- தற்போதைய நிலையில் சுங்கக் கட்டணத்தை தொகையாகவும், பாஸ்டேக் மூலமாகவும் செலுத்த முடியும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுங்கக் கட்டண வசூல் உங்கள் வங்கிக் கணக்கில் இருந்து நேரடியாக எடுத்துக்கொள்ளப்பட்டு விடுமாம்.



THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 21 ஜனவரி -2021 கனி - 2

ஆசிரியருரை

## தேவனாலே பிறந்தவர்கள்
### Who Were Born of God



மனிதன் தேவனாலே சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இப்படி தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவன் பாவத்தின் வஞ்சனையினால் தேவ சமூகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான். அவனை மீண்டும் தேவனோடு ஒப்புரவாக்கும்படியாக வந்தவர் ஆண்டவர் இயேசு. அவரையும் அவருடைய உபதேசங்களையும் ஒருவன் ஏற்றுக்கொள்ளும்போது மீண்டும் தேவனுடைய பிள்ளையாக மாற்றப்படுகிறான். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" (யோவா.1:12). ஒரு ராஜாவின் வீட்டில் பிள்ளையாக பிறப்பது என்பது பெரும் பாக்கியம். அதைப்போல தேவனுடைய பிள்ளையாக பிறக்கவேண்டுமானால் பரலோகத்திலிருந்து பாவ உலகில் மானிடனாக வந்து பிறந்த ஆண்டவர் இயேசுவையும், அவருடைய உபதேசங்களை விசுவாசித்து, கீழ்ப்படிந்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது தேவனுடைய பிள்ளைகளாக மாற்றப்படுகிறோம். இதற்கு விசுவாசம் அடித்தளமாக அமைகிறது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.

சிலர் விசுவாசிப்பார்கள் ஆனால் ஏற்றுக்கொள்ள தயங்குவார்கள். பிசாசுகளும் தேவனை விசுவாசித்து நடுங்குகின்றன. அதைப்போல ஒரு மனிதன் இருப்பானேயானால் அவனுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். விசுவாசத்தை கிரியைகளினால் காண்பிக்கவேண்டும். "தேவஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால்; மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது" என்று 1யோவா.4:2-ல் வாசிக்கிறோம். அறிக்கை மிகவும் அவசியமாயிருக்கிறது. ஒரு பிள்ளையைப் பார்த்து நீ யாருடைய மகன் அல்லது யாருடைய மகள் என்று கேட்கும்போது அந்தப்பிள்ளை தயக்கமின்றி தான் இன்னாருடைய மகன் அல்லது மகள் என்று சொல்வதை கேட்கிறோம். அதைப்போல நம்முடைய பரலோகத்தின் பிதாவையும் அவரால் அனுப்பப்பட்ட ஆண்டவர் இயேசுவையும் அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல எனக் காண்கிறோம். மனிதர்கள் முன்பாக அறிக்கை பண்ணுகிறவர்களை தேவன் பரலோகத்தில் உள்ள தூதர்களுக்கு முன்பாக அறிக்கை பண்ணுவார். "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில்

கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்கிறார் பவுல் (கலா.3:26,27). நாம் விசுவாசத்தினாலே தேவனுடைய பிள்ளைகளாக மாற்றப்படுகிறோம். உலகத்தில் ஒரு தகப்பனுக்கு பிள்ளையாக பிறக்கிறவன் அவனுடைய சுதந்தரவாளியாக இருக்கிறான். தேவனுக்கு பிள்ளையாக பிறப்பது என்பது விசுவாசத்தினாலே வரக்கூடியதாக இருக்கிறது. அதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் இருக்கிறது. இது வெறும் தண்ணீரில் இறங்கி எழுந்திருப்பதல்ல. ஒவ்வொருநாளும் தண்ணீரில் ஸ்நானம்பண்ணுகிறோம். அது நம்முடைய பாவத்தைப்போக்குமா? அது மாம்ச அழுக்கை நீக்குபவையாக இருக்கிறது. கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் வைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கு வெளியே அநேகர் ஞானஸ்நானம் பெறுகின்றனர். அது உலக பாரம்பரியமான ஒன்றாக இருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய உபதேச சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று பெறும் ஞானஸ்நானம் அவர்களை இரட்சிக்கும். அப்படிப்பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார்.

பிறப்பு என்பது மாம்ச சம்பந்தமாக இரத்தத்தினாலும் மாம்சத்தினாலும் பிறப்பதாக இருக்கிறது. தேவனுக்குப் பிள்ளையாக பிறப்பது என்பது இதற்கு அப்பாற்பட்ட செயலாக இருக்கிறது. இது குறித்து நிக்கொதேமு என்றவன் இயேசுவினிடத்தில் வந்து; "ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக; ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவா.3:4,5). பிறப்பு என்றவுடன் அநேகருடைய எண்ணத்தில் உதிப்பது மாம்ச சம்பந்தமான பிறப்பே எனக்கருதுகின்றனர். இங்கு இயேசுவானவர் ஜலத்தினாலும் என்று சொல்லுவது ஞானஸ்நானத்தை குறிக்கிறது. அவரை விசுவாசித்து கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கி எழுந்திருக்கும் செயலைக்குறிக்கிறது. ஆவியினாலும் என்று சொல்லும்போது அவன் புதிதாய் பிறந்த குழந்தையைப்போல புதிதான ஆவியுள்ளவனாக, கலங்கமில்லா ஞானப்பாலாகிய வசனப்பாலின்மேல் வாஞ்சையுள்ளவனாக, பாவமறியாதவனாக, பரிசுத்தவானாக இருக்கவேண்டும். இது ஆவிக்குரிய பிறப்பை வெளிப்படுத்துகிறது. இப்படிப்பிறந்தவர்கள், "இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" என்று யோவான் 1:13-ல் வாசிக்கிறோம். உங்களுடைய பிறப்பு எப்படிப்பட்டதாக இருக்கிறது. நீங்கள் தேவனால் பிறந்தவர்களாயிருக்கிறீர்களா? அல்லது பாரம்பரியமான கிறிஸ்தவ குடும்பத்தில் மாம்ச சம்பந்தமாக பிறந்து, நானும் ஒரு கிறிஸ்தவன் அல்லது கிறிஸ்தவள் என்று சொல்லிக்கொண்டு வருகின்றீர்களா? உங்களுடைய ஆவிக்குரிய பிறப்பைக்குறித்து மறு ஆய்வுசெய்யுங்கள். தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் உங்களுடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என்று வேதத்தில் வாசிக்கிறபடி உங்களுடைய விசுவாசத்தினாலே வல்லமையுள்ள வசனங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுத்து தேவனுடைய பிள்ளைகளாக மாறுங்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் 7ம் அதிகாரம் 13,14 -ம் வசனத்தில் "மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற



எனச் சொல்லிக்கொண்டிருக்கிற அநேகர் நாங்கள் தேவனை வணங்குகிறவர்கள் தான், சபைக்குச் செல்லுகிறோம், ஜெபக்கூட்டங்களுக்குச் செல்லுகிறோம், சிறுவதிலிருந்தே கற்பனைகளைக் கைக்கொண்டுவருகிறோம் என்று சொல்லி சத்தியத்திற்குச் செவி சாய்க்காமல் இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டு பாரம்பரியக் கட்டுகளால் கட்டப்பட்டவர்களாக, எங்களுக்கும் வசனம் தெரியும், தெரியாதவர்களுக்குத் தான் உபதேசம் தேவை என்று சொல்லி காலத்தைக் கடத்துகிறார்கள். நம்மில் ஒருவரும் கெட்டுப் போவதை தேவன் விரும்புகிறதில்லை. தேவனை வணங்குகிற இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்திக் கொண்டிருப்பதைப் போலநாம் இருக்கவேண்டாம்.தேவன் தம்முடைய வார்த்தைகளை நாம் கேட்கத்தக்கதாக நம் இருதயங்களைத் திறக்கும்படி ஆர்வமாய் வேத வசங்களைக் கேட்போம். "எல்லா வற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" (1தெச.5:21). கர்த்தர் நம்முடைய இருதங்களையும் திறந்தருளுவாராக!

அடுத்ததாக, லீதியாள் வசனத்துக்கு செவிமடுத்ததோடு நின்றுவிடாமல் பவுலின் உபதேச வசனங்களுக்குக் கீழ்ப்படிந்தாள். தேவனை வணங்கிக் கொண்டிருந்தவளுக்கு ஞானஸ்நானம் என்பது அவசியமானதாக இருந்தது. தேவனை வணங்கிவந்தால் மட்டும் போதாது, ஒவ்வொருவரும் தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதாகமத்தில் அநேகந்தரம் வலியுறுத்தப்பட்டுள்ளது. பேதுரு அப்போஸ்தலன் தேவபக்தியுள்ள யூதர்கள் மத்தியில் பிரசங்கிக்கையில் "...நீங்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புகென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்.2:38) என்றான். இயேசு கிறிஸ்துவும் "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மத்.16:16) என்றார். இவ்வசனங்களுக்கேற்ப "அவளும் (லீதியாளும்) அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, ..." (அப்.16:15) என வாசிக்கின்றோம். பூலோகத்தில் தாய், தகப்பன், சகோதர, சகோதரிகள் மற்றும் கணவன், பிள்ளைகள் என அனைவரும் ஒன்றாக ஒரே இடத்தில் இருக்க விரும்புகிற நாம் பரலோகத்திலும் அவ்விதமாக இருக்க வேண்டாமா? அப்படியிருப்போமானால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! அங்கே கண்ணீர் இல்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை! அன்றைய நாளில் ராகாப் தன் வீட்டாரோடே கூட இரட்சிக்கப்பட்டது போல, இவளும் இவள் குடும்பத்தாரும் இரட்சிக்கப்பட்டார்கள்.

மேலும் லீதியாளைக் குறித்து வாசிக்கையில் "...அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால் என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்" (அப்.16:15) என வாசிக்கிறோம். இந்த வார்த்தைகள் அவளுடைய விருந்தோம்பும் குணத்தை வெளிப்படுத்துகிறது. இவ்விதமாக ஊழியர்களை உபசரித்திருக்கிறாள். இவளைப் பற்றிய குறிப்பில் இவள் ஒரு நேர்மையான உலகத் தொழில் செய்து கொண்டு தன் ஆஸ்திகளால் சுவிசேஷம் பரம்புவதற்கும் உதவியாயிருக்கிறாள் எனக் கூறப்பட்டுள்ளது. இந்தப் பண்பு நம்மெல்லாருக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இன்றும் அநேக ஸ்திரீகள் பலவிதமான நேர்மையான உலகவேலை செய்கின்றார்கள். இதில் கிடைக்கும் வருமானத்தை கர்த்தருடைய சுவிசேஷப்பணிக்கென்று கொடுத்து உதவலாம் அல்லவா? நம்மில் எத்தனை பேர் நம்மிடமுள்ள கொஞ்சத்திலிருந்தோ அல்லது அதிகமானவற்றி லிருந்தோ சுவிசேஷப்பணிக்கென்று கொடுத்து உதவுகிறோம்? இயேசுவின் நாட்களில் அநேக ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள் என்று லூக்.8:3 ல் வாசிக்கிறோம். நம்மை நாமே சோதித்துப் பார்ப்போம். இவ்வுலகத்தில் அல்ல, பரலோகத்தில் நம் பொக்கிஷங்களை சேர்த்து வைப்போம். நமக்கு உலக வேலைகள் இருந்தபோதிலும் லீதியாளைப்போல கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு, அதன்படி நடந்து ஊழியங்களைத் தாங்குவோம். இப்புத்தாண்டிலே ஓர் தீர்மானம் எடுப்போம்! சபை வளரபாடுபடுவோம்!! கர்த்தர் தாமே நம்முடைய ஆவிக்குரிய தீர்மானங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

# லீதியாள் – Lydia

பெண்கள் பகுதி

-Glory Arjunan



அன்பான சகோதரிகளே உங்கள் யாவருக்கும் இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துகள்! வானத்தையும் பூமியையும் படைத்த நம்முடைய ஒரே மெய்யான தேவன் 2021 ம் ஆண்டில் பிரவேசிக்க நம்மனைவருக்கும் கிருபை செய்துள்ளார். இந்த தேவனுக்கே என்றென்றைக்கும் சதா காலமும் மகிமையும் கனமும் உண்டாவதாக. நாம் நம் ஜீவனுள்ள நாள்பரியந்தம் கர்த்தர் செய்த எல்லா நன்மைகளுக்காக நன்றியுள்ளவர்களாயிருந்து தேவனை அறியா ஜனங்களுக்கு மத்தியில் சாட்சியாக வாழுவோம். கர்த்தர் தாமே தொடர்ந்து நம்மை வழி நடத்துவாராக! இப்போதும் லீதியாள் என்ற பெண்மணியைக் குறித்து ஆராய்ந்து நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கென்று சிலபாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

லீதியாள் என்ற இந்த பெண் தியத்தீரா ஊரைச் சேர்ந்தவள். வேதப்புத்தகத்தின் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இவள் ஐரோப்பாவில் கிறிஸ்தவத்திற்கு மாறிய முதல் பெண் என்று அறியப்படுகிறாள். இன்று துருக்கி என்றழைக்கப்படுகிற ஆசியா மைனரில் உள்ள ஒரு நகரம் தான் இவளுடைய ஊர். ".... இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்..." என அப்.16:14 ல் அறிமுகப்படுத்தப்படுகிறாள்.

லீதியாள் தன்னுடைய பகுதியில் புகழ்பெற்ற தொழிலாகிய இரத்தாம்பரம் விற்கிற ஒரு வசதிபடைத்த விற்பனையாளராகவும் விசாலமான பெரிய வீட்டில் பிலிப்பி பட்டணத்தில் குடியிருந்து வருபவளாகவுமிருந்தாள். இவ்வளவு ஆஸ்திகளைப் பெற்றிருந்த இந்த லீதியாள் "தேவனை வணங்குகிறவளாக" இருந்திருக்கிறாள். இவளைப் பற்றி வரலாறு கூறும்போது இவள் ஜீவனுள்ள தேவனையே, அதாவது யூதர்களின் தேவனையே வணங்குகிறவளாக இருந்தாள் எனக் கூறுகிறது. மேலும் ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் ஸ்திரீகளோடே கூட கூடி வந்து பவுலின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அப்படியானால் யாக்கோபு 1:19 ல் கூறப்பட்டுள்ளபடி 'கேட்கிறதற்கு தீவிரமாய்' இருந்திருக்கிறாள். எனவே தான் வழக்கமாகக் கூடி வந்து ஜெபம்பண்ணுகிற இடத்தில் கூடி வந்துள்ளாள். இவள் ஒரு பிரபல்யமான தொழில் பண்ணின போதிலும் ஜெபம்பண்ணுவதற்குக் கூடி வருவதிலும், வசனம் கேட்பதிலும் தீவிரம் காட்டி இருந்திருக்கிறாள். நம்மில் எத்தனை பேர் இவளைப் போல் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறோம். சபை கூடிவருவதிலும் வேத வகுப்பில் கலந்து கொள்வதிலும் ஆர்வமாக இருக்கிறோமா அல்லது நமக்கு அந்த வேலை வந்துவிட்டது, இந்த வேலை வந்துவிட்டது, தவிர்க்க முடியாத காரணத்தால் ஜெபிக்க வரமுடியவில்லை, ஆராதிக்க வரமுடியவில்லை என்று சாக்குப்போக்கு சொல்லுகிறவர்களாக இருக்கிறோமா? சிந்திப்போம் லூக்.18:19-25 வரையில் ஒரு ஐசுவரியவானைக் குறித்து வாசிக்கிறோம். இவன் தேவனை வணங்குகிறவனாகவும் கற்பனைகளை சிறுவயது முதல் கைக்கொள்ளுகிறவனாகவும் இருந்தான். ஆனால் வசனம் 23 ல் "அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியினால் இதைக் கேட்டபொழுது (இயேசுவின் உபதேசத்தை) மிகுந்த துக்கமடைந்தான். அவன் மிகுந்த துக்கமடைந்ததை இயேசு கண்டு: ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது... என்றார்". ஆனால் ஐசுவரியவாளாகிய இவளோ தேவனுடைய ராஜ்யத்தில் பிறந்த முதல் ஐரோப்பிய பெண்மணியாகக் கருதப்படுகிறாள்.

பவுல் சொல்லியவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த லீதியாளின் இருதயத்தைக் கர்த்தர் திறந்திருளினார் என அப்.16:14 ல் வாசிக்கிறோம். இவள், தான் ஐசுவரியமுள்ளவளாய் இருந்தபோதிலும் ஐசுவரியத்தின் மயக்கத்தில் இல்லை. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க கூடிவந்தபடியால் பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் இவளுடைய இருதயத்தைத் திறந்தார். தங்களை கிறிஸ்தவ ஸ்திரீகள்



இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான் ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" என்றான். ஆம், தேவனுடைய பிள்ளைகள் இயேசுவின் இரத்தத்தினாலே பாவமற கழுவப்படுகிறார்கள். இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்ற வசனத்தின்படி கழுவப்படுகிறார்கள். இப்படி கழுவப்பட்டவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வருகிறார்கள். இயேசுவின் நாட்களில் வியாதியஸ்தர்கள், தங்களுடையவர்களை இழந்தவர்கள், வருத்தப்படுகிறவர்கள் இப்படிப்பட்டவர்கள்தான் அதிகமாக இயேசுவை நோக்கி வந்தார்கள். பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே அல்லாமல் சுகமுள்ளவர்களுக்கல்ல என்று இயேசுவானவரே சொல்லியிருக்கிறார். ஆனால் பலர் எங்களுக்கு என்ன குறை இருக்கிறது. நாங்கள் ஒரு குறையுமின்றி வாழ்கிறோம் என்று சொல்லிக்கொண்டு உலக சம்பத்துக்களையே நாடிப்போகிற கோடிக்கணக்கான ஜனங்களை பார்க்கிறோம். இயேசுவின் நாட்களில் குறைவுள்ளோர் கர்த்தரிடம் வந்ததைப்போல இந்நாட்களிலும் கஷ்டத்திலும் பாடுகளிலும் உபத்திரவங்களிலும் கடன்பிரச்சனையில் மாட்டிக்கொண்டோர்களும், உலகத்தை வெறுத்து மரணத்தை நோக்கி போகிறவர்களும் இயேசுவின் சத்தம்கேட்டு அவரைநோக்கி வருகிறார்கள். அதையே வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் வாசிக்கிறோம். இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். மேலும் இவர்கள் இயேசுவின் இரத்தத்தினாலே தங்களுடைய பாவ அங்கிகளை வெளுத்து தோய்த்தவர்கள் என சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக நீங்கள் கடந்துவந்து இருக்கிறீர்களா?

இப்படிப்பட்டவர்களுக்கு வரும் ஆசீர்வாதம் என்ன? என்பதைக்குறித்து பார்ப்போம். உலக ராஜாக்களுக்கு பிள்ளையாக பிறந்தால் அவனுக்கு வரும் ஆசீர்வாதம் என்ன என்பதை அறிவீர்கள். உலகத்தையும் சர்வத்தையும் உண்டாக்கின தேவனுக்குப் பிள்ளையாக பிறக்கும்போது அதைக்காட்டிலும் அதிகமான ஆசீர்வாதம் இருக்குமல்லவா? ஆம், அவர்கள் கர்த்தரோடே என்றென்றுமாய் இருக்கும் பாக்கியத்தை பெறுவார்கள். "உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1தெச.4:17). இராஜ அரண்மனையில் ராஜாவோடு இளவரசன் இருப்பானேயானால் அவனுக்கு எத்தனை ஆசீர்வாதம்! அதற்கும் மேலாக கர்த்தரோடிருக்கும் ஜனங்களுக்கு இருக்கும். அவர்கள் பசியடைவதுமில்லை, தாகமடைவதுமில்லை, வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்று காண்கிறோம். மேலும் பவுல் கொலேசெய சபையாருக்கு எழுதும்போது; "நீங்கள் கர்த்தராகிய இயேசுவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து," என கொலோ.3;23 -ல் வாசிக்கிறோம். சுதந்தரமாகிய பலன் ஒவ்வொருவருக்கும் வைக்கப்பட்டிருக்கிறது.

மேலும் பவுல் சொல்லும்போது "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை

விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்கிறார் (2தீமோ.4:8). தேவனுடைய பிள்ளைகளாக மாறும் ஆசீர்வாதம் யாவருக்கும் உரியது. யாவரும் அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளைகளாக மாறலாம். இந்த உலகத்திலே வரும் உபத்திரவங்களிலிருந்து அவன் வெற்றியடைந்து ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக வாழவேண்டும். "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" (வெளி.21:7). கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு வெற்றியுள்ள வாழ்க்கை. அநேகர் வழியருகே விதைக்கப்பட்ட நிலத்தைப்போலவும், முற்களுக்குள் விதைக்கப்பட்ட விதையைப்போலவும், கற்பாறையில் விதைக்கப்பட்ட விதையைப்போலவும் பலன்கொடாதிருக்கிறார்கள். தேவன் யாவருக்கும் போதுமான தேவனாயிருக்கிறார். அவர் பட்சபாதம் செய்கிறவரல்ல, யாவரையும் அவர் நேசிக்கிறார். நல்லோர் மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். கர்த்தருடைய வசனத்தைப் பற்றிக்கொண்டு யாரெல்லாம் இந்த உலகத்தில் ஜெயங்கொள்ளுகிறார்களோ, அவர்களுக்கு நீதியின் கிரீடம் வைத்திருக்கிறார். அவர்கள் அதை சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். அப்படிப்பட்டவர்களுடைய தேவனாக அவர் இருக்கிறார். அவர்கள் அவருடைய குமாரனாயிருப்பார்கள். ஆண்டவர் இயேசு இவ்வுலகத்தில் பிசாசையும் அவனுடைய காரியங்களையும் ஜெயித்ததைப்போல, யாரெல்லாம் உலகத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் ஜெயிக்கிறார்களோ, அவர்கள் தேவனுடைய குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் இருப்பார்கள்.

நீங்கள் தேவனால் பிறந்தவராக இருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் இன்றே அவருடைய பிள்ளைகளாக மாற முற்படுங்கள். நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய காத்திருக்கிறோம்.

**தேவனால் பிறந்தவர்கள் பாவம் செய்யமாட்டார்களா?**

ஆம், தேவனால் பிறந்தவர்கள் பாவம் செய்யமாட்டார்கள். ஏனெனில் அவருடைய வித்தாகிய வசனம் அவர்களில் தரித்திருக்கிறது. அவருடைய வசனம் அவர்களைக் காக்கிறது. பாவத்திற்கு விலகும்படி அவ்வசனங்கள் அவர்களை எச்சரிக்கிறது. தேவ ஆவியானவர் அவர்கள் பாவம் செய்ய இடங்கொடார். ஆகையால், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்" (1யோவா.5:18). யோசேப்பு என்ற தேவனுடைய மனுஷன் தன்னை பாதுகாத்துக்கொண்டான். தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி? என்ற ஒரு கேள்வியை எழுப்பினான். ஆனால் யூதாஸ் என்பவனோ, தனக்குள்ளே பிசாசு உட்புகுந்தபடியாலே இயேசுவை காட்டிக்கொடுக்கும்படி வகைதேடினான். தான் யார், எப்படி தெரிந்துகொள்ளப்பட்டோம் என்பதை மறந்து முப்பது வெள்ளிக்காசுக்கு உடன்பட்டு இயேசுவை முத்தத்தினாலே காட்டிக்கொடுத்தான். இதிலிருந்து தேவனாலே பிறந்தவர்கள் தங்களை எப்படி பாதுகாத்துக்கொள்ளுகிறார்கள் என்பதையும், பிசாசின் பிடியிலிருக்கிறவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை எப்படி இழக்கிறார்கள் என்பதையும் அறிகிறோம். நீங்கள் உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.


'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்




## வேத அறிவுப்போட்டி 242-ன் விடைகள்

1. யோனா - யோனா 1:10
2. பாக்கியவான்கள் - மத்.5:8
3. மீகா - மீகா 2:7
4. இல்லை - மாற்.2:27
5. நாகூம் - நாகூம் 1:15
6. மரியாள் - லூக்.1:52
7. ஆபகூக் - ஆபகூக் 3:15
8. வெளிப்படுத்தினார் - யோவா.1:18
9. வல்லமையுள்ளவர் - செப்.3:17
10. மத்தியா - அப்.1:26

### சரியான பதில் எழுதியவர்கள்

1. S. சாலமோன் செல்வராஜ் - வள்ளியம்மாள்புரம்
2. Mrs. வசந்தா ரபீந்திரன் - தூத்துக்குடி
3. T. ஏஞ்சலின்நேசமலர் - கன்னியாகுமரி
4. Mrs. ஞானம்பிலிப் - கோவை
5. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
6. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
7. J. ஆலிவ் - கோவை
8. B. ஞானதீபம் ஜெபராஜ் - இடையன்குடி
9. J.விக்டர் சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
10. E. அதிசயம் - பனைகுடி
11. V.C. ரூபவல்யா - நாசரேத்
12. P. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
13. Mrs. ஜெபாறியூட்டன் - திருநெல்வேலி
14. Mrs. ரூத்ஜெராணி அன்புராஜ் - திருநெல்வேலி
15. Mrs. ஜாய் சந்திரகாந்தா - நல்லூர்
16. Mrs. ஃபுளோரா சுந்தர் - மதுரை
17. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் - மதுரை
18. J. மேரி ஜெயக்குமார் - மதுரை
19. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
20. S. சாந்தகுமாரி - நாசரேத்
21. Mrs. பாலின்மாட்டின் - காரைக்குடி
22. Miss.D. சாந்தாதேவி - பன்னைப்புரம்
23. T. இராஜாத்தி - கோம்பை
24. Mrs. ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
25. Mrs. ரூபிஜெயசீலி - கலுங்குவிளை
26. Sis.R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
27. M. ராமசந்திரன் - ஒட்டநத்தம்
28. Mrs. ஏசுமணி இயேசுதாசன் - ஆனந்தபுரம்
29. Mrs. கெத்சிசெல்வின் - சென்னை
30. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
31. Mrs. ஃபுளோராஜான் - ஊட்டி
32. J. ஜாய்கமலம் - நாசரேத்
33. J. பிச்சை - விருதுநகர்
34. D. அன்புக்கமலம் - காரைக்குடி
35. J.S. மேரித்தாய் - திண்டுக்கல்
36. J. ஆலிஸ்குணசீலி - சாயர்புரம்
37. S. ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
38. D. தேவபுஸ்பம் - நாசரேத்
39. Mrs. ஜெயராணி ஜெபராஜ் - மேற்கு தாம்பரம்
40. Mrs. ஜெபக்குட்டி மோசஸ் - மருதகுளம்
41. E. ஜாய்ஹெலன்புனிதா - மேற்கு தாம்பரம்
42. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
43. Mrs. ரூக்மணி ஜெயசீலன் - பன்னைப்புரம்
44. Mrs. சாந்தாபழனி - தருமபுரி
45. Mrs. பாலின்டேனியேல் - சென்னை
46. M. முருகன் - பிலிக்கல்பாளையம்
47. Mrs. கீதா - கன்னியாகுமரி
48. R. ஜெபர்சன்ஜேக்கப் - கன்னியாகுமரி
49. J. ஜெகிர்சா - கன்னியாகுமரி
50. Mrs. எபிநேசர் எட்வர்டு - கடலூர்

**வாசகரின் அன்பு கடிதம்...**

ஐயா, நான் சில ஆண்டுகளாக தங்களின் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' இதழ் பெற்று வாசித்து வேத அறிவுப்போட்டி தொடர்ந்து விடை எழுதி வருகிறேன். 12.12.2020 ல் தாங்கள் எனக்கு புத்தாண்டு பரிசாக அழகிய 2021 டைரி அனுப்பியதை நன்றியுடன் பெற்றுக்கொண்டேன். எனது குடும்ப நன்மைக்கு ஜெபித்துக்கொள்ளுங்கள், ஜெபிக்கிறேன். அன்புடன் E.அதிசயம்.

## வேத அறிவுப்போட்டி 243-ன் விடைகள்

1. ஆசாரியரிடத்தில் - ஆகாய் 2:11
2. தேவநீதிக்கு - ரோம.10:3
3. நீதியுமான - சகரி.8:8
4. உங்களுடையதே - 1கொரி.3:21
5. பொன்னைப்போலவும், வெள்ளியைப்போலவும் - மல்.3:3
6. பெருக அறுப்பான் - 2கொரி.9:6
7. ஏவாள் - ஆதி.3:13
8. வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி வருமளவும் - கலா.3:19
9. மோசேயை - யாத்.7:1
10. ஆம் - எபே.5:17

### சரியான பதில் எழுதியவர்கள்

1. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
2. E. அதிசயம் - பனைகுடி
3. Mrs. ரூத் ஜெயராணி அன்புராஜ் - திருநெல்வேலி
4. A. டேவிட்ஜெயச்சந்தின் - மதுரை
5. J.S. ஜெயா மேரித்தாய் - திண்டுக்கல்
6. D. அன்புக்கமலம் - காரைக்குடி
7. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
8. Mrs. ஜாய் மேத்யூ - வி.கே.புரம்
9. Mrs. ரூபவல்யா - தூத்துக்குடி
10. Mrs. பாலின்மார்ட்டின் - காரைக்குடி
11. Mrs. ஜெயமணி ராஜம்மாள் - கடலூர்
12. Mrs. ஃபிராங்களினா ஜான் - ஊட்டி
13. Mrs. இராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
14. R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
15. P. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
16. Mrs. மரகதம்திரவியம் - கோம்பை
17. T. ராஜாத்தி - கோம்பை
18. Mrs. ஞானம்பிலிப் - கோவை
19. Mrs. ராணிமூர்த்தி - திருநெல்வேலி
20. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
21. Mrs. ருக்மணி ஜெயசீலன் - பன்னைப்புரம்
22. Mrs. ஜெபாமோசஸ் - விளாத்திகுளம்
23. Mrs. ஜேன் தர்மராஜ் - திருநெல்வேலி
24. Mrs. சாந்தாபழனி - தருமபுரி
25. J. செல்வராஜ் - தூத்துக்குடி
26. Mrs. அன்னம்மாள் - தூத்துக்குடி
27. J. ஆலிவ் - கோவை
28. S. ரெஜினா செல்வராஜ் - நாசரேத்
29. D. தேவபுஸ்பம் - நாசரேத்
30. E. ஜாய்ஹெலன்புனிதா - சென்னை
31. S. நிர்மலா எழிலன் - சேலம்
32. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
33. Mrs. பாலின்டேனியல் - சென்னை
34. S. சந்திர காந்தா - நல்லூர்
35. J. விக்டர் சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
36. S. சாந்தகுமாரி - நாசரேத்
37. Mrs. கிறிஸ்டோபல் - கோவை
38. Mrs. இராஜம்மாள் - சென்னை
39. Mrs. ஜோதிமணி அப்பாத்துரை - மதுரை
40. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் - மதுரை
41. J. மேரி ஜெயக்குமார் - மதுரை
42. C. அருள்ராஜ் - சென்னை
43. Mrs. கெத்சி செல்வின் - சென்னை
44. Mrs. பியூலாஜேசுராஜன் - புதுச்சேரி
45. K.M. சாந்தி - வாடிப்பட்டி
46. C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
47. Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
48. Mrs. ஜெயராணி ஜெபராஜ் - மேற்கு தாம்பரம்
49. S. ஹரிராகவன் - வேப்பம்பட்டு
50. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
51. J. பிச்சை - விருதுநகர்
52. S. செல்வராஜ் சாலமோன் - வள்ளியம்மாள்புரம்
53. A. ஆலிஸ் குணசீலி - சாயர்புரம்
54. Mrs. ஜெபக்கனி மோசஸ் - மருதகுளம்
55. Sis.D. விஜயா காந்தி - வடகாதிபட்டி
56. M. முருகன் - பிலிக்கல்பாளையம்
57. Mrs. வசந்தா ரபீந்திரன் - தூத்துக்குடி

ஆனால் பிறர் நலத்தைக் குறித்த ஒரு சிந்தனை கடைசியாக உருவாக்கப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. நமது கர்த்தர் பரத்துக்குத் திரும்பிச் செல்லும் முன்பு அவர் என்ன செய்தார்? "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும், சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென் (மத்தேயு 28:18-20).

ஆதி முதலாக தேவன் கொண்டிருந்த நோக்கம் பாவம் நிறைந்த மனுஷரை தம்மிடமாய் திரும்பவும் சேர்த்துக்கொள்ளுவதற்கான வழியாக இருந்தது. ஜனங்களாக சுவிசேஷத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிகையில் மட்டுமே இது நடைபெற முடியும், அதன் பொருட்டு அவர்கள் சபையாகிய தேவனுடைய குடும்பத்தில் ஒரு குழந்தையாக இருக்க முடியும். போதுமான வழிநடத்துதலுக்காக அவர் புதிய ஏற்பாட்டினை அளித்துள்ளார், ஆனால் உலகத்திற்குச் இச்செய்தியைக் கொண்டு செல்ல வேண்டிய உண்மையான பணி மனுஷருடைய கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதைக் குறித்து சிந்தியுங்கள்! காலங்காலமாக தேவனுடைய ஒட்டுமொத்தப்பணி, நித்திய ஈவாகிய இரட்சிப்பு, நம்முடைய கரங்களில் கொடுக்கப்பட்டுள்ளது! இதற்காக நாம் என்ன செய்யப் போகிறோம்? இதை அமைதியாக, அலட்சியத்துடன், இச்செய்தி நம்மோடுகூட மரிக்கும்படி பிடித்துக் கொள்ளப்போகிறோமா - அல்லது இழந்து போயிருக்கிற உலகத்தில் தேவனுடைய சப்தமாக இருக்கப்போகிறோமா?

தேவதூதர்கள் மனுஷ சாயலில் பிறந்த இயேசுவின் பிறப்பினைக் கவனித்துக் கொண்டிருந்தனர் என்று கூறப்பட்டிருக்கிற நிகழ்வுகள், போதனையில் அவருக்குச் செவிசாய்ப்போர் அவருடைய செயல்களைக் கண்டனர். அவர்கள் அவருடைய மரணத்தில் மன உளைச்சலுக்கு ஆளாகி, அதன்பின் அவர் கல்லறையை விட்டு எழுந்தபோது ஜெயத்தில் சந்தோஷமடைந்தனர். வெற்றி! வெற்றி! அவர் பரத்திற்கு ஏறிச் சென்று அவருடைய சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டபோது, ஆவலுடன் அவரிடத்தில் நெருக்கிக் கொண்டு சென்றனர்.

"இப்போது எல்லா நேரங்களிலும் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை நாம் அறிவோம்"! அவர்கள் கதறினார்கள். "அவர்களை இரட்சிக்கும்படி நீர் மரித்திருக்கிறீர் என்று வெளியே சென்று உலகத்திற்கு சொல்லுவோம்"! என்றனர்.

"இல்லை", இயேசு பதிலளித்தார். "இது உங்களுடைய வேலை அல்ல".

"பிறகு யாருடைய வேலை இது?" அவர்கள் குழப்பத்துடன் கேட்டனர்.

"நான் இந்த வேலையை என்னுடைய சீஷர்களின் கரங்களில் விட்டு விட்டேன்".

என்ன??? நீர் உம்முடைய அநாதி வேலையை மனுஷருடைய கரங்களில் விட்டு விட்டீரா? அவர்கள் நம்பிக்கையில்லாதவர்களாய் கேட்டனர்.

"ஆம்" இயேசு பதிலளித்தார்

"ஆனால், கர்த்தாவே", தேவதூதர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர், "நீர் மனுஷரை நம்ப முடியாது! ஆதாமும் ஏவாளும் உலகத்திற்குள் பாவத்தைக் கொண்டுவந்தனர். யூதாஸ்காரியோத் உம்மைக் காட்டிக் கொடுத்தான். சீமோன் பேதுரு கூட உம்மை மறுதலித்தான் - அவனுடைய கரங்களில் எல்லாவற்றையும் விட்டு விட்டு இருக்கிறீர் மேலும் வரவிருக்கும் காலங்களையும் மனுஷரித்தில் விட்டு இருக்கிறீர்???

"ஆம்", கர்த்தர் பதிலளித்தார்.

"ஆனால் நிச்சயமாக - இக்காரியத்தில் உம்மை தோற்கடிப்பார்கள் - நிச்சயமாக, நீர் வேறொரு திட்டம் கொண்டுள்ளீர்".

"இல்லை - நான் வேறொரு திட்டத்தினை கொண்டிருக்க வில்லை...."


**நம்மிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பினை நாம் எவ்வாறு செய்யப் போகிறோம்?**



# நாம் ஏன் ஆராதனையில் வாய்மொழி பாடலை மட்டும் கொண்டிருக்கவேண்டும்

# Why We Have Vocal Music Only In Worship

-J.C.Choate




**கி**றிஸ்துவின் சபையாராகிய நாம் மற்ற அநேக சமயக் குழுக்களி லிருந்து வேறுபட்டிருக் கின்றோம், ஏனென்றால் நம்முடைய ஆராதனையில் நாம் வாயினால் பாடுகின்றதை மட்டுமே ஏற்றுக்கொள்கிறோம். ஆனபடியினால், நாம் நம்முடைய பாட்டினை இசைக் கருவிகளோடு இணைக்கிறதில்லை. இது வித்தியாசப்படுத்துவதற்காக செய்வதில்லை என நான் தாமதமின்றிச் சொல்வேன். மாறாக, வேதாகமம் இவ்வாறு போதிக்கின்றபடியால், நம்முடைய ஆராதனை வேளைகளில் வாயினால் பாடுகின்றதையே ஏற்றுக்கொள்கிறோம்.

இரண்டு விதமான இசை உண்டு. ஒன்று வாய்மொழியில் பாடுவது இன்னொன்று இசைக்கருவியினால் பாடுவது. வாய்மொழி சங்கீதமானது பாடுகின்ற, இனிமையான ஒலியெழுப்புகின்ற இணக்கமான மனிதக் குரல்களாக, மேலும் உலகத்தில் மிக அழகான சங்கீதமாக வெளிப்படுகின்ற ஒன்றாகும். இந்தவிதமான சங்கீதம் தேவனுடைய படைப்பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது மேலும் நம்முடைய சிருஷ்டிகராகிய தேவனுக்கு துதியாகசெலுத்தப்படுகிறது. இது முழுவதும் ஆவியாயும், ஜீவனாயுமிருக்கிறது. இசைக்கருவியின் இசை மனிதனால் உருவாக்கப்பட்ட இசைக்கருவியிலிருந்து வருகிறது. இவ்வகையான கருவிகள் ஜீவனற்றது. அவைகள் ஆத்துமா அல்லது ஆவியைக் கொண்டிருக்கவில்லை. அக்கருவிகளின் மேல் மனிதன் அடிப்பதினாலும், அவைகளை இழுப்பதினாலும் அல்லது அவைகளை மீட்டுவதினாலுமே அவைகள் ஒலிகளை எழுப்புகின்றதாயிருக்கிறது. இப்போது இதன் வினாவானது; தேவன் தம்முடைய சிருஷ்டிகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா அல்லது மனிதனுடைய படைப்புகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா? எது அவருக்கு மிகவும் கருத்துள்ளதாயிருக்கும்? எபிரெய எழுத்தர், "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி.13:15) என்கிறார். நாம் நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர் சொல்லுவதை தயவு செய்து கவனியுங்கள். அது நம்முடைய கனியாக இருக்கும். நம்முடைய பேச்சு, நம்முடைய பாட்டு, நம்முடைய ஜெபங்கள், நம்முடைய துதியின் வார்த்தைகள் போன்றவைகளே நம்முடைய உதடுகளின் கனியாக இருக்கும். யாருக்கு இது செலுத்தப்பட வேண்டும்? நிச்சயமாக, தேவனுக்கே.

நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்கின்றதின் நோக்கத்தைத் தொடர்ந்து பார்க்கையில், பவுல், "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக்கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து" (எபே.5:19,20) என்று சொல்லுகிறார். ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு அல்லது பாடிக்கொண்டு,

அதாவது பாடல்களின் பல்வேறு வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாடிக்கொண்டு என்று சொல்லுவதை தயவுசெய்து கூர்ந்து கவனியுங்கள். அத்தோடுகூட அவைகள் ஆவிக்குரியதாகவும் வேதவசனங்களுக்கேற்றபடியாகவும் இருக்கவேண்டுமென அவர் வலியுறுத்துகிறார். கடைசியாக, அவர் இந்த சங்கீதங்கள் இருதயத்தில் பக்தியுடன் பாடப்படவேண்டும், வாத்தியக்கருவிகளினால் அல்ல என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். இப்போது கிறிஸ்தவர்கள் பாடிக்கொண்டே இருந்தால் மட்டும், அவர்கள் தேவனை ஆராதிக்கமுடியுமா? ஒருவேளை நீங்கள் ஆம் என்று கூறலாம். ஆனால் வாத்தியக்கருவியோடு பாடுவதுபற்றி என்ன சொல்லலாம்? வேதவசனங்கள் அது பற்றி போதித்தால் அது நன்றாக இருக்கும், ஆனால் வேதவசனங்கள் எங்கே அவ்வாறு போதிக்கிறது. அவ்வாறு வசனங்கள் போதிக்கவில்லையென்றால், நம்முடைய சங்கீதத்திற்கு வாத்தியகருவியின் இசையைக்கூட்டினால், அப்புறம் நாம் கர்த்தருடைய சித்தம் செய்கின்றவர்களாயிருப்போமா?

மீண்டும் பவுல், "**கிறிஸ்துவின் வசனம்** உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப்பக்தியுடன் பாடி" (கொலோ.3:16) என்கிறார். இங்கே பவுல் என்ன சொல்கிறார்? அவர் ஆவிக்குரிய மற்றும் ஞானப்பாட்டுகளினாலும் வார்த்தையினாலும் போதித்து புத்திசொல்லிக் கொண்டு கர்த்தரைத் துதித்துப்பாடுவதின் மூலம் கிரியை நடப்பியுங்கள் என்று கிறிஸ்துவின் வசனத்தை வலியுறுத்திச் சொல்கிறார். அதுவே உண்மையாயிருக் கின்றது. பவுலுடைய கூற்றில் வாத்தியகருவி இசையை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாக காண்கிறீர்களா? இல்லையென்றால், ஆராதனையில் தேவனை ஸ்தோத்தரித்துப்பாட வாத்தியக்கருவி இசையை இணைக்கும்படி தொடர்வீர்களானால் நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு கூட்டிக் கொண் டவர்களாயிருக்கமாட்டீர்களா? ஆனால் இதனால் ஒன்றும் தவறில்லையென நீங்கள் விவாதிக்கலாம். பிறகு யாரும் எந்தகாரியத்திலும், வேறொன்றிலும் இதில் தவறொன்றையும் காணவில்லை எனத் தொடர்ந்து கூறலாம். முக்கிய குறிப்பானது, நாம் தேவனுடைய வார்த்தையின் போதனையில் கண்டிப்பாக உறுதியாயிருக்க வேண்டும். நாம் அவ்வாறு இல்லையென்றால், பிறகு ஏன் எப்படியாகிலும் இது குறித்து கலங்குகிறீர்கள்?

இது எனக்குப்பிடிக்கிறது அல்லது வாத்தியக்கருவியை மீட்டும் தாலந்தையும் திறமையையும் பெற்றிருக்கிறவர்கள் பற்றிய காரியமென்ன? என்றும் நீங்கள் வாக்குவாதத்துடன் திரும்பவும் வரலாம். அவர்கள் வாத்தியக்கருவிகள் மூலம் சங்கீதம் பாடிக் கர்த்தரை ஸ்தோத்தரித்தால் தேவன் அதனால் மகிமைப் படுத்தப்படமாட்டாரா? மீண்டும் நான் என்ன விரும்புகிறேனோ அதுபற்றிக் கவலை இல்லை, ஆனால் இது தேவன் என்ன விரும்புகிறாரோ அது பற்றியதாகும். ஒருவர் வாத்தியக்கருவியை இசைக்கும் தாலந்து அல்லது திறமை பெற்றிருந்து, அதன் அடிப்படையில் தேவனைத் துதிக்கும்படி அவன் வாத்தியக்கருவியை இசைக்க அனுமதிக்கப்படவேண்டுமானால், அந்த தாலந்துகளையும், திறமைகளையும் பெற்றிராத மற்றவர்கள் பற்றிய காரியம் என்ன? அந்தத் திறமைகளைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டுமென அப்பேர்பட்ட திறமைகளை ஆராதனைக்குள் திறமையற்றஅவர்கள் கொண்டுவரவேண்டுமென நாம் வாதிப்போமா? இந்தக் குறிப்பை நீங்கள் கவனிப்பீர்களென நான் நினைக்கிறேன்.

நீங்கள் வாத்தியக் கருவி இசையை வீட்டில் கொண்டிருந்தால் நிச்சயமாக நீங்கள் ஆராதனையில் அதை பயன்படுத்தலாம் என மீண்டும் இது விவாதிக்கப்படுகிறது,



உருவாக்கப்பட்டது எனக் காணலாம். இதில் ஒரு பெரிய வித்தியாசம் என்னவென்றால் அடிக்கடி ஏற்படுகிற நம்முடைய உணர்ச்சிகள் பாவம் நிறைந்த அடித்தளங்களிலிருந்து உருவாகின்றன ஆனால் தேவனுடையதோ எப்போதும் அவருடைய நன்மைகளிலிருந்தும் நீதியிலிருந்தும் உருவானதாயிருக்கின்றது.

A) கோபம் : எரேமியா 21:5
B) சிரிப்பு : சங்கீதம் 37:13
C) இன்பம் : சங்கீதம் 3:27, 1யோவான் 3:22
D) அலைச்சல் : ஏசா.43:24
E) எரிச்சல் : உபாகமம் 31:21; 1கொரிந்தியர் 10:22
F) வெறுப்பு : சகரியா 8:17
G) சந்தோஷப்படுத்து : சங்கீதம் 37:23,24
H) அன்பு: 1யோவான் 3
I) கருணை : எரேமியா 12:15
J) மென்மை : ஏசாயா 40:11
K) இரக்கம் : சங்கீதம் 103:8
L) பரிவு : சங்கீதம் 103:13
M) சந்தோஷம் : செப்பனியா 3:17
N) அவருடைய அன்பில் அமர்ந்திருத்தல் : செப்பனியா 3:17
O) களிப்புடன் பாடுதல் : செப்பனியா 3:17

4. **சமுதாயத்தில்**

A) கிறிஸ்தவர்கள் பிறருடன் சுற்றிலும் இருப்பவருடன் தம்மை விடுவித்து தனிமை வாழ்வினை நாடுபவராக இருக்கக்கூடாது. நாம் சமூக கட்டமைப்பில் நன்மை செய்யக்கூடிய ஒரு அங்கமாக இருந்து, தனிப்பட்ட விதத்தில் நமது உலகின் வளர்ச்சிக்கு நம்மால் செய்யக்கூடியவற்றை செய்து, இணக்கமாக உதவிசெய்கிற உறவினை உருவாக்க வேண்டும்.

B) உடையிலும், பொழுதுபோக்கிலும் உலகப்பிரகாரமான மற்ற ஈடுபாடுகளிலும் கலாச்சாரத்தை பிரதிபலிப்பதற்குப் பதிலாக தேவனுக்கேற்ற நேர்மையான நம்முடைய மாதிரியுள்ள நடக்கை உள்ளதென்று நாம் உறுதியுடனிருக்க வேண்டும்.

C) நம்மைச் சுற்றியுள்ளவர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு நாம் தருணத்தை உண்டாக்குகிறவர்களாய் இருக்க வேண்டும்

5. **ஆவிக்குரிய ரீதியில்.**

A) நம்முடைய சரீரம் தேவனுக்கு அர்ப்பணித்த நமது ஆவிக்குரிய ஒப்புக்கொடுத்தலைப் பிரதிபலிக்கையில், நமது ஆத்துமா அழிவில்லாததாயும் தேவனோடு கூட ஓர் ஆழமான உறவினை மட்டும் நிரப்பக்கூடிய வெறுமையானதாகவும் இருக்கிறது.

B) நமது மனம், "சரி மற்றும் தவறு" என்ற விழிப்புணர்வினை நமக்குக் கொடுத்து, தேவனுக்கு நமது கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாமை குறித்து நமது மனசாட்சி விழிப்புணர்வினை கொண்டிருக்கவும் நமது ஆத்துமாவோடு கிரியை நடப்பிக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தையை அறிகிற அறிவின் மூலம் நமது மனங்களைப் பழக்குவிக்க வேண்டும். அப்போதுதான் நாம் எப்போதும் தேவனுக்கு முன்பாக தெளிந்த மனசாட்சியுடன் வாழ முடியும்.

C) வெறுமனே சத்தியத்தை அறிந்து கொள்வது போதாது; நமது நினைவுகள் மற்றும் கிரியைகளின் ஒவ்வொரு நிலையிலும் அவைகள் நம்மை வடிவமைக்க வேண்டும்.

பெண்கள் பகுதி

## ஒரு கிறிஸ்துவளாக என்னுடைய சொந்த வாழ்க்கையும் வளர்ச்சியும்

My Personal Life and Development As a Christian

-Betty



### VII. ஆவிக்குரிய முதிர்ச்சி (வளர்ச்சி) க்கு உதவும்படி என்ன உபாயங்களெல்லாம் பயன்படுத்தப்படுகிறது?

1. தேவனுடைய மனிதன் உள்ளுணர்வினை மனிதன் எழுதப்பட்ட கடிதம் (வேதாகமம்) மூலம் அறியச்செய்கிறார். தேவனுடைய "நினைவுகளை" நான் உண்மையாக அறிந்து கொள்ள ஒரே வழி, அவருடைய வார்த்தையை வாசித்து, கற்று, மனப்பாடம் செய்து பின்பு அதை இருதயத்தின் ஆழத்தில் இருத்திக் கொள்வதன் மூலம் வளர்ச்சியடைய முடியும்.
2. அவருடைய குடும்பம்: நம்முடைய வளர்ச்சியில் உதவி செய்கிற உடன் கிறிஸ்தவர்கள்.
3. ஜெபத்திற்குப் பதில்கள்.
4. நம்முடைய பெலத்தை விருத்தியடையச் செய்யும் சவால்கள்.

### VIII. பிதாவைப் போலிருப்பதற்கு நான் எவ்வழிகளில் வளர்ச்சியடைய வேண்டும்?

1. **என்னுடைய சரீரத் தோற்றத்தில்.** உலக நாடுகள் சரீரத்தின் ஒப்பனை மற்றும் ஆடை போன்றவற்றிற்குக் கொடுக்கக்கூடிய முக்கியத்துவத்தை சுற்றிலும் பாருங்கள். நாம் உலகத்தைப் பின்பற்றுகிறோமா அல்லது உடல் அதிகம் தெரியாத, உடலின் பெரும்பகுதியை மூடிக்கொள்ளும்படியான ஆடை உடுத்தவும் எல்லா வழியிலும் தேவபக்தியைப் பிரிதிபலிக்கிறோமா?
   - A) உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடிய முகத்தோற்றம்.
   - B) உடை உடுத்துதல்
   - C) சொத்துக்கள்
2. **மனதளவில்.** மனிதன் தனிப்பட்ட விதத்தில் தேவனுடைய வார்த்தைகளை வாசிப்பதற்கு திறன் பெற்றிருக்கிறபடியால் நாம் மனதளவில் அவருடைய சாயலில் வளர முடியும். நாம் அவருடைய நினைவுகளைக் குறித்து வேதாகமத்தில் இருந்து கற்றுக்கொள்வது எதுவோ அதன்படி நாம் நமது மனங்களையும் நினைவுகளையும் முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்: அவருடைய அன்பின்மேல்.

   A) ஒழுங்கு - சிருஷ்டிப்பின் (படைப்பின்) எல்லாவற்றிலும் நேர்த்தியான ஒழுங்கையும் படைக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படும்படி வடிவமைக்கப்பட்டுள்ள விதத்தையும் நாம் காண்கிறோம்.

   B) சமாதானம் - போரட்டங்கள், கூச்சல் குழப்பங்கள், சண்டைகள் எல்லாம் மொத்தத்தில் மனித ஆவிக்கு ஒன்று நிகழும்போது எதையும் செய்யவிடாமல் தடுத்து நிறுத்தும் செயல்களாக இருக்கிறது. தேவனுடைய அநாதி திட்டம் முழு சமாதானத்திற்காகவும் அமைதிக்காகவும் இருந்தன என சான்றளிக்கிறது.

   C) நீதி - நாம் பாவமற்ற ஜீவன்களாக சிருஷ்டிக்கப்பட்டோம். இப்போதுங்கூட குழந்தைகளும் சிறுபிள்ளைகளும் (மனித வர்க்கம் அனைத்துக்குமான அவருடைய அநாதி திட்டமாக) வளர்ந்து நல்லது கெட்டது, சரி தவறு என்ற புரிந்துகொள்ளும் நிலைமைக்கு வந்து தவறானவற்றைச் செய்ய முயலும்வரைக்கும் பாவமற்றவர்களாக இருக்கின்றனர். இது முழுவதும் நீதியுள்ளவர்களாயிருக்கும்படி தேவனுடைய இயற்கையான சுபாவமாயிருக்கிறது மேலும் இரட்சிக்கப்பட்டவர்கள் புதியவானம் புதிய பூமியில் தங்களுடைய வீட்டை சுதந்தரிப்பார்கள். அங்கே பாவமிராது.
3. **உணர்சிவசப்படுதல்.** நாம் வேதவாக்கியங்களை கவனமாக வாசிக்கும்போது மனுஷரின் அனுபவமான ஒவ்வொரு உணர்ச்சியும் தேவனால்



உண்மை என்னவென்றால், நம்மால் ஆராதனைக்குள் கொண்டு செல்ல இயலாத அநேக பொருட்கள் வீட்டில் காணப்படுகிறது. என்னுடைய குடும்பமும் நானும் இசையை விரும்புகிறோம், நாங்கள் வானொலியில், அல்லது கேசட் ரிக்கார்டில் இசையை உற்றுக்கேட்பது வழக்கம், ஆனால் ஆராதனைக்கு இது வரும்போது எங்களைப் பிரியப்படுத்துகிற அந்த காரியங்களை நிறுத்தி விட்டு, கர்த்தரைப் பிரியப்படுத்துகிற காரியத்தையே செய்ய ஆரம்பிக்கிறோம். நாம் வீட்டில் ஐஸ்கிரீம் சாப்பிடவும், ஐஸ் டீ சாப்பிடவும் விரும்புகிறோம், ஆனால் இந்தக் காரியங்களெல்லாம் ஆராதனைக்கு வெளியே செய்யப்பட வேண்டியதென நாம் உணருகிறோம்.

பழைய ஏற்பாட்டில் தாவீதும் மற்றவர்களும் இதைப் பற்றி போதித்தார்களென உரிமைபாராட்டி ஆராதனையில் வாத்தியக் கருவி இசையைப் பயன்படுத்துவதை ஆதரிப்பது முக்கியமான வாக்குவாதங்களில் ஒன்றாயிருக்கிறது. அவ்வாறு இருந்ததோ இல்லையோ, பழைய ஏற்பாடு பிரமாணம் தொடர்ந்து நிலைத்திருக்கவில்லை என்பது உண்மை, ஏனென்றால் கிறிஸ்து அதை எடுத்துப் போட்டு ஒரு புதிய பிரமாணத்தைக் கொடுக்கும்படி சிலுவையில் மரித்தார். அதை நாம், "...நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17) என வாசிக்கிறோம். கிறிஸ்து நியாயப்பிரமாணத் திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் ஒழிந்து போகாது என்று சொன்னார் (மத்.5:17,18). கிறிஸ்து சிலுவையின் மேல் மரித்தபோது அதை நிறைவேற்றினார், இவ்வாறாக பழைய பிரமாணத்தை நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார் (கொலோ.2:14). இந்தக் காரியம் இவ்வாறிருக்கையில், நாம் சங்கீதத்தை அல்லது பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதியை இன்று ஆராதனையில் வாத்தியகருவி இசையை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்த முடியாது. நம்முடைய தற்போதைய காலத்தில் செய்யாத மற்றும் செய்ய இயலாத பல காரியங்கள் அப்போது செய்யப்பட்டது.

இதை நியாயப்படுத்தும் முயற்சியில் இன்னொரு முக்கியமான வாக்குவாதம், பரலோகத்தில் இசைக் கருவி பயன்படுத்தப்படும் என்பதாகும். பரலோகத்தில் இசைக்கருவி இருக்குமானால், நிச்சயமாக நாம் இந்த பூமியிலே ஆராதனையில் இசைக் கருவி பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர்கள் தீர்மானிக்கின்றனர். உண்மையாகவே அவர்கள் வாத்தியக்கருவியைப் பற்றிபேசிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நேரடியான மனிதனால் உருவாக்கப்பட்ட, இயந்திர இசைக்கருவிகள் இருக்குமென வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தில் அல்லது வேறெங்கே வாசிக்க முடிகிறது? ஆனால் அப்படியே வாத்தியக்கருவியின் இசை இருக்குமானால், இன்று ஆராதனையில் அதை பயன்படுத்தும்படி நமக்கு கர்த்தர் அனுமதியளித்துள்ளார் என அர்த்தமாகிறதில்லை. பூமியிலே நாம் பெற்றிராத அநேகப் பொருட்கள் பரலோகத்தில் உள்ளன என்பது உண்மையான விஷயம். தேவன் குறிப்பாக ஆராதனையில் இன்று என்ன எதிர்பார்க்கிறார் மேலும் கடைசியாக பரலோகத்தில் தோற்றமளிக்கிற இருவேறுபட்ட பொருட்கள் என்ன.

வேதாகம வித்துவான்களும், பெரிய மதத்தலைவர்களும் பல வருடங்களுக்கு மேலாக வேதவாக்கியங்கள் மற்றும் வேறு குறிப்புகள் போன்ற இரண்டிலுமிருந்தும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனையில் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கான எந்த குறிப்பும் இல்லையென ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனபடியினால் இந்த தலைவர்களில் பலர் அவர்களுடைய நாட்களிலும் மற்றும் நம்முடைய நாட்கள் வரைக்கும் தேவனை ஆராதிக்கையில் ஜனங்கள் வாத்தியக்கருவிகளைப்

பயன்படுத்தவில்லை என்று தீர்மானித்தார்கள். உதாரணமாக, கத்தோலிக்க சபை இறுதியாகப் பிரிந்தது, இந்த பிரிவு தேவனைத் துதிப்பதில் வாத்தியக்கருவி இசை தங்களுடைய பாடல்களில் இடம்பெறவேண்டுமா என்ற கேள்வியை கொண்டுவந்தது என்பது பல காரியங்களில் ஒன்று. அந்தக் குழு இது சேர்க்கப்பட வேண்டுமென நினைத்து, ரோம கத்தோலிக்க சபையாக மாறியது, ஆகவே அவர்கள் இன்றுவரை அதை பயன்படுத்திவருகிறார்கள். இன்னொரு குழு வாத்தியக்கருவி இசையை பயன்படுத்த மறுத்து, கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை என மாறியது, அவ்வாறாக இவர்கள் இன்று வரை தங்கள் ஆராதனை வேளைகளில் அவைகளைப் பயன்படுத்துகிறதில்லை. அதற்கப்புறம், சீர்திருத்தலும் பிராட்டஸ்டண்ட் இயக்கங்களிலும், ஜான் வெஸ்லி போன்ற மனிதர்கள், தேவன் தம்முடைய பரிசுத்த வார்த்தைகளில் முன்குறிக்கப்பட்டுள்ளபடி ஆராதனைக்குரிய தேவனுடைய தெய்வீக திட்டதில் இப்பேர்பட்ட வாத்தியக்கருவி இசையை சேர்ப்பதற்கு தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் வாசிக்க வேண்டிய அநேக வேத வசனங்கள் உள்ளன. கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட பிற்பாடு கர்த்தரும், சீஷர்களும் உருவாக்கிய ஒரு கூற்றுடன் ஆரம்பிப்போம். “அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்” (மத்.26:30) என வாசிக்கிறோம். பிறகு பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு கால்கள் தொழுமரத்திலே மாட்டப்பட்டு அவர்கள் உட்காவலறையிலே அடைக்கப்பட்டார்கள், இவைகளெல்லாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ததினால் ஏற்பட்டது, இது, “நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந் தார்கள்” (அப்.16:26) என்று சொல்கிறது. பவுல் கொரிந்துப்பட்டணத்து கிறிஸ்தவர் களுக்கு “என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்” (2கொரி.14:14,15). என்று எழுதினார். யாக்கோபு, “உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்” (யாக்.5:13) என்றார்.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சங்கீதம் பாடுவது பற்றி பல கூற்றுகள் உள்ளன. யோவான், “தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்றும் “அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியான வருடைய பாட்டையும் பாடி சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான் களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்” (வெளி.15:3) என்று எழுதினார். முன்பு அறிவித்தபடி வெளிப்படுத்தின விசேஷம் எவ்வாறு யோவான் பரலோகத்தில் சத்தத்தைக் கேட்டான் என்பது பற்றியும் கூறுகிறது, “...... நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது” (வெளி.14:2) என்றான். ஆனால் தயவு செய்து கவனியுங்கள் அவன் பெருவெள்ள



உள்ளவைகளாய் இருந்தன. புதிய ஏற்பாட்டு திட்டத்தின்படியே சபையின் ஆளுகை பின்பற்றப்படுமேயாகில் பிராந்திய சபைகள் ஒருபோதும் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட மாட்டாது.

**கேள்விகள்**

1.--------------- என்ற ஒரு வார்த்தைக்கான அர்த்தம் "தன் ஆளுகை" என்பதாக இருக்கிறது.

2. வேதாகமம் "பிரதிநிதிகள்" மற்றும் "பயணம் செய்யும் கண்காணிகளை" குறித்து பேசுகிறதா?

3. வெளி.1:11 சொல்கிறது ----------- இருந்த ஏழு சபைகளுக்கு நிருபங்கள் எழுதப்பட்டன என்று.

4. முந்தைய நாமகரண கூட்ட பழக்க வழக்கங்கள் சகோதரர்களை ------- ஒன்றாக இணைக்கும்படி விருப்பமுடையவர்கள் ஆக்குகின்றன.

5. பழைமையானதும், பலம் வாய்ந்ததுமான சபைகள் பலவீனமான சபைகளை ஆளுகை செய்ய வேண்டுமா? ------------

6. புதிய ஏற்பாட்டில் சபைகள் வடிவமைக்கப்படுவதில் ஒன்று சேர்க்கப்பட்டனவா?

7. பல சபைகளுக்கு மேலாக ஒரே ஆளுகை செய்யும் குழு இருப்பதை குறித்து வேதாகமம் பேசுகிறதா?

8. ஆதியிலே இருந்தபடி விருத்தி செய்தல் என்னும் வார்த்தை எதை குறிப்பிடுகிறது? -----------.

9. மாவட்ட அளவிலான ஊழியர்கள் பின்நாட்களில் ஒரு ----------- என்ற பதவிக்கு வழிநடத்தப்பட்டார்கள்.

10. 2யோவான் 9 சொல்கிறது நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் ----------- நாம் ---------- உடையவர்களல்ல என்று -------.


**சந்தா செலுத்திவிட்டீர்களா?**

**The Word of Christ**
**Canara Bank A/c No.0946201000552**
**IFSC:CNRB0000946**



**India Post Payments Bank**
**ARJUNAN**
**048410018536**
**IPOS0000001**





முகக்கவசம் அணிவது
தனி மனித இடைவெளி
சோப்பு போட்டு கைகழுவுதல்

## ஜெபியுங்கள்

- புது வருடத்தை நன்மையால் ஆசீர்வதித்த தேவனுக்கு நன்றி சொல்லி...
- புது வருடத்தில் புது பெலனைப் பெற்றுக்கொள்ள...
- புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை அநேகர் அறிந்துகொள்ள...
- புதிய ஆத்துமாக்களை கர்த்தர் சந்திக்க...
- புதிய சபைகளுக்காக...
- புதிய ஊழியங்களுக்காக...
- புதிய வானத்தையும் புதிய பூமியையும் சந்திக்க ஆயத்தப்பட...



2. அலுவலர்கள் பிராந்திய சபையில் மட்டும் ஆளுகை செய்கிறார்கள். ஊழியர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சபையை ஆளுகை செய்யத் தொடங்கிய பொழுது வேதவாக்கியங்களின்படியான சபை ஆளுகையை விட்டு முதலாவது விலகிச் செல்லும் காரியங்களில் ஒன்றாக இருக்கிறது. இந்த ஒன்றுக்கு மேற்பட்ட சபையை ஆளத்தொடங்கினார்கள் மாற்றும் வேதாகம திட்டத்திலிருந்து விலகினார்கள். சில குறிப்பிட்ட பகுதிகளில் சபைகளுக்கு மேலாக மாவட்ட அளவிலான ஊழியர்கள் வழிநடத்தும்படி ஆனது. இந்த வழக்கமானது பின்நாட்களில் ஒரு போப் என்ற பதவிக்கு வழிநடத்தியது. **வேதாகம திட்டத்தின்படியான ஆளுகையை மீட்டமைக்கும்படியாக ஊழியர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிராந்திய சபையில் கட்டாயமாக பணியாற்ற வேண்டாம்.** தேவனுடைய திட்டம் பின்பற்றப் பட்டிருக்குமேயாகில் ரோமன் கத்தோலிக்க சபைக்கு வழி நடத்தப்பட்டவர்களை அது தடை செய்திருக்கும். பெரும்பாலான புராட்டஸ்டெண்டு சபைகளிலும் ஒன்றுக்கு மேற்பட்ட சபையை ஆளுகை செய்யும் ஊழியர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு பிரதிநிதிகள் அல்லது பயணம் செய்யும் கண்காணிகள் போன்ற பல பட்டங்கள் இருக்கின்றன. அவர்களுடைய பணியானது பல உள்ளூர் குழுக்களை மேற்பார்வை செய்வதாக இருக்கிறது. அவர்கள் அடிக்கடி தங்கள் மாவட்டம் அல்லது பகுதியில் ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்கு பயணம் செய்கிறார்கள். ஆனால் வேதவாக்கிங்களின்படியான ஊழியர்கள் ஒரு பிராந்திய சபையில் மட்டுமே ஆளுகை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சபையாரில் பெரிய சபைகள் சிறிய மற்றும் இளமையான பிராந்திய சபைகளை ஆளுகை செய்யும்படி விரும்பத்தக்கதாக சோதிக்கப்படுகிறார்கள். நகரப் பகுதியிலுள்ள சபைகள் காரியங்களை ஆளுகை செய்ய முயற்சி செய்யக் கூடும். அவர்கள் ஒருவேளை பலவீனமான சபைகளை ஆளுகை செய்யும்படி தங்கள் மூப்பர்களை அனுப்பக்கூடும். இது ஒரு நாமகரண கூட்டத்தாரின் திட்டமாக இருக்கிறது. இது சபையின் ஆளுகை அமைப்பை கேடுபாடானதாக ஆக்கும் முயற்சிக்கு நேரான ஒரு நடவடிக்கையாக இருக்கிறது. மற்றொரு சபையை சேர்ந்த ஊழியர்கள் ஒரு பிராந்திய சபையை மேற்பார்வை செய்ய முயற்சிப்பார்களேயாகில், அந்த சபை மெய்யாகவே சுயாதீனம் உள்ளதாக இருக்க முடியாது.

3. பிராந்திய சபைகள் சரியாக வேலை செய்யும்படி ஒருமிக்க சேர்த்து ஒழுங்குபடுத்தப்படுகிறதில்லை: கிறிஸ்துவின் சபையில் அநேக அங்கத்தினர்கள் முன்பு அநேக வருஷங்களை நாமகரண சபைகளில் செலவழித்து இருந்தார்கள். இந்த நீண்டகால அனுபவம் மெய்யான சபையின் அமைப்பைக் குறித்து ஒரு சிறந்த புரிந்து கொள்ளுதலில் இருந்தது. அவர்களை விலக்கி வைக்கிறது. அவர்கள் தங்களுடைய முந்தைய சபைகள் இருந்ததுபோல, கிறிஸ்துவின் சபைகளும் ஒன்று சேர்ந்தவகையில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆகையால் அவர்கள் பல சபைகளுக்கான கன்வென்ஷன் கூட்டங்களை ஒரே பகுதியில் நடத்த விரும்புகிறார்கள். அவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட குழுக்கள் அதிகாரிகள் மற்றும் பொக்கிஷ சாலையுடனே இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்கள் அடிக்கடி "ஒன்றிணைந்த ஆராதனைகளில்" பழக்கமுடையவர்களாகி தங்களுடைய பகுதி ஊழியங்களை பாழக்கி போடுகிறார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டில் சபைகள் ஒன்றாக இணைக்கப்படவில்லை.

ஒவ்வொரு சபையும் அமைப்பில் முழுமையான சுயாதீனம் உள்ளவைகளாயிருந்தன. கிறிஸ்து ஆசியாவிலிருந்த ஏழு சபைகளுக்கு ஏழு நிருபங்களை எழுதினார் (வெளி.1:11). ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு தனி நிருபம் அனுப்பப்பட்டது. பிராந்திய சபைகள் ஒரே பகுதியில் இருந்த போதிலும், அங்கே சபைகளுக்கான ஸ்தாபனம் இருக்கவில்லை. அங்கே இருந்த ஏழு சபைகளுக்கு மேலாக அதிகாரிகள் குழு இருக்கவில்லை. ஒவ்வொரு பட்டணத்திலிருந்த ஒவ்வொரு பிராந்திய சபையும் சுயாதீனம்



இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தத்தையும் கேட்டான் மேலும் அவன் நான்கு மிருகங்களைக் குறித்து பேசுகிறான். ‘‘..... பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரே...’’ (வெளி.4:2,3). இங்கே வெளிப்படுத்தின புத்தகம் முழுவதும், யோவான் தான் பரலோகத்தில் என்ன பார்த்தான், என்ன கேட்டான் என்பதைப் பற்றி மனிதனுக்குத் தெரியப்படுத்தும் முயற்சியில் பல எண்ணிக்கையிலான அர்த்த விசேஷபாஷையைப் பயன்படுத்துகிறான். ஆனபடியினால் அவன் பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், சுரமண்டலக்காரர் வாசிக்கிற சுரமண்டல ஓசையைப் போலவும் கேட்டான். ஆனால் பரலோகத்தில் நேரடியான, பூமிக்குரிய, வாத்திய கருவிகள் தான் இருந்தன என்பதாக அவன் அர்த்தப்படுத்தவில்லை.

சங்கீதம் பாடுவது அல்லது தேவனை ஆராதிக்கையில் நம்முடைய பாட்டுடன் வாத்தியக்கருவியின் இசையைக் கொண்டிருத்தல் போன்ற காரியத்தோடு, இது பிரமாணத்திற்கடுத்த ஒரு காரியமாகும். வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கே பேசுவோம், அது எங்கு அமைதியாயிருக்கிறதோ அங்கே அமைதியாயிருப்போமா அல்லது தேவன் சொல்லியிருக்கிறவற்றிற்கு புறம்பாக நாம் என்ன செய்ய விரும்புகிறோமா அதை தொடர்ந்து செய்வோமா? வேதாகமம் கிறிஸ்து பரலோகத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொண்டவராயிருக்கிறாரெனவும் ஆனபடியினால் அவர் பேசியிருக்கிறார் எனவும் கூறுகிறது. ஆகவே நாம் அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் கனத்தை செலுத்தி அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு மாறாக வேறொன்றையும் செய்யக்கூடாது. ஆனபடியினால் நாம் ஆராதனையில் வாய்மொழி சங்கீதம் அல்லது பாட்டு பாடுவதற்கு மட்டும் இடமளிக்க நம்முடைய இசைக் கருவி இசையைக் கட்டுப்படுத்தவேண்டும். அதன்பின் மட்டுமே, தேவன் அதில் பிரியமாயிருப்பாரென நிச்சயமுடையவர்களாயிருக்க முடியும்.

நீங்கள் எவ்வாறு தேவனை ஆராதிக்கிறீர்கள்? இது நீங்கள் அறிய வேண்டிய காரியம். நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால் நீங்கள் கிறிஸ்தவராக மாற நாங்கள் விரும்புகிறோம். கிறிஸ்து, ‘‘விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.....’’ (மாற்.16:16) என்றார். அதன் பின் கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார் என வாசிக்கிறோம் (அப்.2:47) இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக, கர்த்தருடைய சபையில் ஒரு அங்கத்தினனாக, தேவனை ஆவியோடும் உண்மையோடும் நீங்கள் தொழுது கொள்ள முடியும் (யோவா.4:24).

## தெரிந்து கொள்ளுவோம்

*- K.R.K.Ravi Asir*

- ❒ நண்டு தன் ஆயுட்காலத்தில் 18 முறை தோலை உரிக்கிறது.
- ❒ 14-ம் லூயி மன்னர் தான் படுத்து உறங்குவதற்கு மட்டும் 413 கட்டில்கள் செய்து வைத்திருந்தார்.
- ❒ மனிதக் குடலை தரையில் விரித்து வைத்தால் நூறு சதுர அடி பரப்பளவில் இருக்கும்.
- ❒ ‘கேஷ்’ என்கிற ஆங்கிலச் சொல் ‘காசு’ என்ற தமிழ் வார்த்தையிலிருந்து வந்தது.
- ❒ மிக நீளமான கடற்கரை கொண்ட மாநிலம் குஜராத்.
- ❒ உலகின் மிகப் பெரிய பாராளுமன்றம் சீனாவில் உள்ளது.
- ❒ உலகிலேயே ஓநாய்கள் அதிகம் உள்ள நாடு ரஷ்யா.

**வேதகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**




**தற்சோதனை பகுதி - 28**

**28. பண்டிகைகளைப் பற்றி வேதாகம போதனை என்ன?**

1. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது ☐ வசன ஆதாரம் ---
2. பண்டிகை நாளைக் குறித்து ஒருவன் உங்களை குற்றப்படுத்தலாம் ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------------
3. கிறிஸ்துவுடனேகூட உலக வழிபாடுகளுக்கு மரிக்க வேண்டும் ☐ வசன ஆதாரம்----------------------------------------------------------------
4. இவைகள் மாம்சத்தைப்பேணும் ஆனாலும் பிரயோஜனமானது ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------------------
5. நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே ☐ வசன ஆதாரம் ---------------------------------------------------
6. எனவே பழைய புளித்த மாவை கொஞ்சம் சேர்த்துக்கொள்ளுங்கள் ☐ வசன ஆதாரம் ---------------------------------------------------
7. துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம் ☐ வசன ஆதாரம்----------------------------
8. கர்த்தர் ஆசாரியர்களை நோக்கி: பண்டிகைகளின் சாணியையே உங்கள் முகங்களில் இறைப்பேன் என்று சொல்லவில்லை ☐ வசன ஆதாரம்--------
9. அவளுடைய எல்லா மகிழ்ச்சியையும், அவளுடைய பண்டிகைகளையும்... எல்லா ஆசரிப்புகளையும் ஒழியப்பண்ணுவேன் என்றார் ☐ வசன ஆதாரம் -
10. நிறைவானது வரும்போது குறைவானது ஒழியாது ☐ வசன ஆதாரம் -----


**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள் வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம். இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -9**

**பிராந்திய சபைகள் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றன?**

**வரைகுறிப்பு**

**1. ஒவ்வொரு பிராந்திய சபையும் சுயமான ஆளுகையை கொண்டது அல்லது சுதந்திரமானது.**

**2. அலுவலர்கள் பிராந்திய சபையில் மட்டும் ஆளுகை செய்கிறார்கள்.**

**3. பிராந்திய சபைகள் சரியாக வேலை செய்யும்படி ஒருமிக்க சேர்ந்து ஒழுங்குபடுத்தப்படுகிறதில்லை.**

**கலந்துரையாடல்**

1. ஒவ்வொரு பிராந்திய சபையும் சுயமான ஆளுகையைக் கொண்டது அல்லது சுதந்திரமானது. கிறிஸ்துவின் சபைகள் நாமகரண சட்டதிட்டங்களுக்கு அடிமைப்படாதவைகளாயிருக்கின்றன. அவர்கள் கண்டிப்பானவகையில் சபைக்கான தேவனுடைய திட்டத்தின்படி செல்ல பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டில் சபை இருந்தது போல ஒரு சரியான சபை விருத்திக்காக வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தருடைய சபைக்கான அவருடைய திட்டத்தின் ஒருபாகமாக அதை மீட்டுக் கொண்டுவர அவர்கள் கிரியை நடப்பித்துக் கொண்டு இருக்கிறார்கள். இவற்றில் முக்கியமானபாகங்களில் ஒன்றாக வேதவாக்கியங்களின்படி பிராந்திய சபைகளின் வடிவமைப்பை மீட்டமைத்துக் கொண்டு வர வேண்டியதாக இருக்கிறது. நாம் புதிய ஏற்பாட்டு சபையின் மெய்யான ஆளுகையின் தன்மையைக் கற்றுக் கொள்ளும் பொழுது இன்றைக்குள்ள சரியான சபையின் சட்ட திட்ட வகையை பின்பற்றக்கடவோம். இன்றைக்கு பிராந்திய சபையில் வேதவாக்கியங்களின்படியே அதற்கான அலுவலர்கள் இருக்கிறார்கள் என்பதை முந்திய பாடம் வெளிப்படுத்தியது. பிராந்திய சபைகள் எந்த வகையிலும் ஒரு வாரியத்தின் கீழாகவோ, நிர்வாகக் குழுவின் கீழாகவோ செயல்படுகிறதில்லை. ஒவ்வொரு பிராந்தியசபையும் அந்தந்த சபையிலிருந்தே தன் சொந்த அலுவலர்களைக் கொண்டு தேவையை பூர்த்தி செய்து கொள்கிறது. இந்த அமைப்புக்கு புறம்பேயிருந்து எந்த உயர்வான அமைப்பும் சபைகளை ஆளுகை செய்கிறதில்லை.

"சுயாட்சி" என்னும் பதம் "தன் ஆளுகையை" குறிப்பிடுகிறது. ஒரு சுயாட்சியுடைய சபை தன்னைத்தானே ஆளுகை செய்வதாக இருக்கிறது. அதற்கு புறம்பே அதற்கு மேலாக பெரிதான வல்லமை இல்லை. அது தனக்கான அலுவலர்களை தானே தேர்ந்தெடுக்கிறது, அதற்கென்று சொந்தமான சுவிசேஷகர்களை தேர்வு செய்து கொள்கிறது. சொந்தமான நிதிகளை தானே நிர்வாகம் செய்கிறது, தன் ஒழுங்கற்ற அங்கத்தினர்களை ஒழுங்குபடுத்துகிறது சபைக்கு புறம்பேயுள்ள மனித மேற்பார்வையின்றி எல்லா வகையிலும் அது சுயாதீனமானதாக இருக்கிறது. அது கிறிஸ்துவுக்கு மட்டுமே கீழ்ப்பட்டதாய் இருக்கிறது. அதன் அதிகார புத்தகம் வேதாகமம் மாத்திரமே. அது அதனுடைய சொந்தமான ஆராதனைகளை நடத்துகிறது, இன்னும் திட்டக்கூட்டங்கள், மற்றும் ஊழிய நிகழ்ச்சிகளை நடத்துகிறது. ஒவ்வொரு பிராந்திய சபையும் அவசியம் சுயமான ஆளுகை உடையதாக அல்லது சுயாதீனம் உள்ளதாக இருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டு சபை நிர்வாகத்தை இன்று கொண்டு வரும்படியாக இதைச் செய்ய வேண்டும்.